எங்கே உயிர் எங்கே தமிழ்ழீழம் பதில் சொல்லு
எங்கள் தலை வீரம் அதன் மர்மம் நீ சொல்லு
தினமும் விழிகள் அழுகைகள் மீண்டும்
பகையீன் கொடுமைகள் புயலின் நடையில்
மௌனங்கள் தலைவன் எங்கே கேள்விகள்
வா தலைவா எம் வாழ்கையே
வா அழகே எம் வேட்கையே

எங்கே உயிர் எங்கே தமிழ்ழீழம் பதில் சொல்லு
எங்கள் தலை வீரம் அதன் மர்மம் நீ சொல்லு

நந்திக்கடலில் தலைவன் படைகள் நாலு
திசையும் புயலானதே
நம்பும் தமிழர் வாழ்வில் இன்றும் தலைவன்
வழியே தமிழீழமே தமிழர் மனங்கள் இன்று
அலைமோதுதே தலைவன் நிலையை அறிய
அனலாகுதே பரவும் இருளை மீண்டும் விழி
பார்க்குதே பாதை வழியே குருதி தினம் பாயுதே
தமிழாகி மொழி காட்டும் அழகாக
வழிகாட்டும் இனவாழ்வே வா தலைவா ஆ
தடுமாறி இனம் இங்கு இருள் சூழ்ந்த வாழ்விங்கு மீட்பராய்
வா தலைவா

எங்கே உயிர் எங்கே தமிழ்ழீழம் பதில் சொல்லு
எங்கள் தலை வீரம் அதன் மர்மம் நீ சொல்லு

வல்ல தலைவன் போனதடங்கள் மர்ம
மொழியாய் எமதானதே வற்றாப்பளையில்
அம்மன் விழியில் தலைவன் தர்மம்
உயர்வானதே புலிகள் வாழ்ந்த குகையில்
நரி ஊழையே
புதிய வழியில் இன்று தினம் ஊனமே
வேர்கள் விடுமா தாய்மை மொழியேங்குதே
வேலுப்பிள்ளை மகனை இனம் தேடுதே குடி
வாழும் கனவோடு வரிவீர அழகோடு
நடந்தாயே வா தலைவா ஆ
குடும்பத்தை இனவாழ்வில் களமாக்கி பார்த்தாயே
ஊனைப்போலே யார் தலைவா

எங்கே உயிர் எங்கே தமிழ்ழீழம் பதில் சொல்லு
எங்கள் தலை வீரம் அதன் மர்மம் நீ சொல்லு
தினமும் விழிகள் அழுகைகள் மீண்டும்
பகையீன் கொடுமைகள் புயலின் நடையில்
மௌனங்கள் தலைவன் எங்கே கேள்விகள்
வா தலைவா எம் வாழ்கையே
வா அழகே எம் வேட்கையே

எங்கே உயிர் எங்கே தமிழ்ழீழம் பதில் சொல்லு
எங்கள் தலை வீரம் அதன் மர்மம் நீ சொல்லு